தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

# செய்தி மடல்

செய்தி 15 மடல் 4 ஏப்ரல் – 2015 ₹1.00

## தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் பதினேழாம் பட்டமளிப்பு விழா




தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் பதினேழாம் பட்டமளிப்பு விழா, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் அண்ணா கலையரங்கில் 20.03.2015அன்று நடைபெற்றது. விழாவிற்கு மேதகு தமிழக ஆளுநர் மற்றும் பல்கலைக்கழக வேந்தர் டாக்டர் கே. ரோசய்யா அவர்கள் தலைமை வகித்து, 250 பட்டதாரிகளுக்குப் பட்டங்களை வழங்கினார். மேலும், அஞ்சல் வழியில் பட்டங்களைப் பெறும் 109 பட்டதாரிகளுக்குப் பட்டங்கள் பெறுவதற்கான அனுமதியும் வழங்கினார்.

பல்கலைக்கழகத்தின் இணைவேந்தர் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. டி.கே.எம். சின்னையா அவர்கள் விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தார். மேலும், அவர் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் பி.வி.எஸ்சி மற்றும் ஏ.எச். பட்டத்திற்கான கால்நடை ஊட்டச்சத்தியல் பாடத்தில் அதிக மதிப்பெண் பெறும் மாணவர்க்கான ‘‘என்.பி. செல்லப்பன் சின்னம்மாள் நினைவுத் தங்கப் பதக்கம்’’, கால்நடை நோய்க்குறியியல் பாடத்தில் அதிக மதிப்பெண் பெறும் மாணவர்க்கான ‘‘எஸ்கேஜிஆர் தங்கப் பதக்கம்’’, கால்நடை ஈனியல் மற்றும் இனப்பெருக்கவியல் பாடத்தில் அதிக மதிப்பெண் பெறும் மாணவர்க்கான ‘‘டாக்டர் கே.ஆர். குணசேகர் மற்றும் பிரபு ராம் சங்கர் ஆப்டிமா தங்கப் பதக்கம்’’ மற்றும் கால்நடை உயிர்த் தொழில்நுட்பவியலில் சிறந்த ஆசிரியர்க்கான ‘‘டாக்டர் வி.டி. பத்மநாபன் தங்கப் பதக்கம்’’ ஆகிய ஐந்து அறக்கட்டளைகளை நிறுவினார்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் வரவேற்புரை மற்றும் பல்கலைக்கழகத்தின் கல்வி, ஆராய்ச்சி, விரிவாக்கப் பணிகள் குறித்த அறிக்கை அளித்தார். துணைவேந்தர் அவர்கள் தமது உரையில் இப் பல்கலைக்கழகத்தின் மூலம் தரமான கல்வி அளித்தல், சமுதாயத்திற்குத் தேவையான பயனுள்ள ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் மற்றும் கிராமப்புற மக்களுக்குச் சேவையாற்றத் தேவையான விரிவாக்கப் பணிகள் ஆகியவற்றில் மேதகு வேந்தர் அவர்களின் சீரிய ஆலோசனைகள் எங்கள் பணிகளைச் செவ்வனே செயல்படுத்தும் ஊன்றுகோலாக அமைகின்றன என்றார். தமிழக அரசால் தொடங்கப்பட்ட விலையில்லாக் கறவைமாடு, ஆடுகள் விநியோகத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தி, திட்டத்தின் கீழ் தமிழக ஏழை விவசாயிகளுக்கு 16 இலட்சம் ஆடுகள், 36,000 கறவை மாடுகள் வழங்கப்பட்டதற்கு மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுக்குத் துணைவேந்தர் அவர்கள் பாராட்டுத் தெரிவித்தார். இவ்வாறு வழங்கப்பட்ட கறவை மாடுகள்மூலம் தினமும் 80,000 லிட்டர் பால் கிடைக்கிறது என்று குறிப்பிட்டார். மேலும், தரமான கல்வி அளித்தலை உறுதிசெய்யும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளைப் பல்கலைக்கழகம் எடுத்துள்ளது என்று குறிப்பிட்ட துணைவேந்தர், அமெரிக்கா, ஸ்பெயின், டென்மார்க், கொரிய நாடுகளைச் சார்ந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தேசியக் கல்வி நிலையங்களைச் சார்ந்த 19 வல்லுநர்கள், நமது பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குச் சில குறிப்பிட்ட பாடப் பிரிவுகளைக் கற்பித்தல் மற்றும் பயிற்சி அளித்தலுக்கான பேராசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டனர் என்றார். இந்தியக் கால்நடை மருத்துவக் கழகத்தின் அங்கீகாரம் பெறுவதற்கு ஏதுவாகத் திருநெல்வேலி மற்றும் ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் பொருட்டுத் தமிழ்நாடு அரசு ரூபாய் 89.28 கோடி நிதியுதவி அளித்து, தொடர்ந்து உதவி செய்து வருகிறது என்று குறிப்பிட்டார். பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி பற்றிக் குறிப்பிட்ட துணைவேந்தர் அவர்கள், இளைய பேராசிரியர்களிடையே ஆராய்ச்சி மனப்பாங்கை உருவாக்கும் வகையில் பல்கலைக்கழக ஆராய்ச்சித் தொகுப்பு நிதி உருவாக்கப்பட்டு, 30 ஆராய்ச்சித் திட்டங்களுக்கு ரூபாய் 58.63 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது என்றார். மொத்தம் 209 ஆராய்ச்சித் திட்டங்களுக்குப் பல்வேறு தேசிய மற்றும் பன்னாட்டு நிதி முகமைகளிடமிருந்து ரூபாய் 613 கோடி பெறப்பட்டு, திட்டங்கள் செயல்பாட்டில் உள்ளன என்றார். பல்கலைக்கழகத்தின்



விரிவாக்கப் பணி பற்றி குறிப்பிட்ட துணைவேந்தர், தமிழ்நாடு அரசின் விலையில்லாக் கறவை மாடு மற்றும் ஆடு வழங்கும் திட்டப் பயனாளிகளுக்குப் பல்கலைக்கழகத்தின் பயிற்சி மையங்கள்மூலம் இலவச பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது என்றார். பசுந்தீவனப் பற்றாக்குறையைக் கவனத்தில் கொண்டு தரிசு நிலங்களை மேம்படுத்தும் வகையில் தமிழ்நாடு அரசிடமிருந்து ரூபாய் 694.80 இலட்சம் மதிப்பில், “விழுப்புரம் மற்றும் வேலூர் மாவட்டங்களில் மெய்க்கால் புறம்போக்கில் பசுந்தீவன உற்பத்தி” என்ற திட்டத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார். விவசாயிகளை இடைத்தரகர்களிடமிருந்து காக்கும் வகையில் காட்டுப்பாக்கம், வேளாண் அறிவியல் நிலையத்தில் “வானவில் வாரச் சந்தை” ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றார்.



புதுதில்லி, வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்வித் துறைச் செயலர் மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் தலைமை இயக்குநர் முனைவர் எஸ். ஐயப்பன் அவர்கள் பட்டமளிப்பு விழாவின் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, பட்டமளிப்பு விழாப் பேருரை நிகழ்த்தினார். அவர் தமது உரையில் இந்தியாவின் நீடித்த வேளாண் வளர்ச்சிக்குப் பருவ நிலை மாற்றம் அச்சுறுத்தலாக உள்ளது என்றார். பருவ நிலை மாற்றத்தை எதிர்கொள்ளத் தக்க வேளாண்மை குறித்த தேசிய நடவடிக்கையை நாட்டின் வேளாண்மை மற்றும் அதன் சார்புத் துறையில் பருவ நிலை மாற்றத்தின் தாக்கத்தை மதிப்பிடச் செய்தல், தாக்கத்தைக் குறைத்தல் போன்ற முக்கியக் குறிக்கோளுடன் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் தொடங்கியுள்ளது என்று குறிப்பிட்டார். மேலும், தொழில்நுட்ப உருவாக்கம் மற்றும் பயன்பாட்டிற்கு “முதலில் விவசாயி” என்ற கொள்கைத் திட்டத்தின்மூலம் விவசாயி – விஞ்ஞானி இடையேயான தொடர்பை மேம்படுத்த வேண்டும் என்றார். புதிய பட்டதாரிகளுக்குத் தமது வாழ்த்துகளைத் தெரிவித்த அவர், 12ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழில்முனைவோரை உருவாக்கும் வகையிலும், சிறப்புத் திட்டங்கள்மூலம் ஊரக இளைஞர்களின் திறனை மேம்படுத்தும் வகையிலும், அவர்களை வேளாண்மையில் ஈடுபடச் செய்யும் வகையில் ஊரகத் தொழில்முனைதல் மற்றும் விழிப்புணர்வு மேம்பாட்டுத் திட்டம், வேளாண்மையில் இளைஞர்களை ஈர்த்தல் மற்றும் தக்கவைத்தல் திட்டம் ஆகியவை முன்மொழியப்பட்டுள்ளன என்றார்.



கல்வியில் சிறப்பிடம் மற்றும் தனித்திறன் பெற்ற மாணவர்களுக்கு 98 பதக்கங்கள் மற்றும் விருதுகள் வழங்கப்பட்டன. செல்வன் ஜிதேந்திர குமார் யாதவ் 18 பதக்கங்களையும், செல்வன் எஸ். சசிகுமார், செல்வி பி. அண்ணல் செல்வ மலர், செல்வி ஆர். சாகித்யா ஆகியோர் தனித்தனியே 8 பதக்கங்களையும் பெற்றனர். மேலாண்மைக் குழு மற்றும் கல்விக் குழு உறுப்பினர்கள், பட்டமளிப்பு விழாக் குழுக்களின் உறுப்பினர்கள், பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர்கள், பல்கலைக்கழக அதிகாரிகள், பேராசிரியர்கள், பெற்றோர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோர் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்றனர்.

## செயல்திறன் மேம்பாட்டுத் திட்டம் – துவக்க விழா

பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி இயக்ககம், சென்னை மஹிந்த்ரா கன்சல்டிங் இன்ஜினியர்ஸ் லிமிடெட், எம்.எஸ். செல்லமுத்து அறக்கட்டளை மற்றும் ஆராய்ச்சி பவுண்டேஷன் ஆகியவை இணைந்து செயல்படுத்த உள்ள “மதுரை மாவட்டத்தில் கறவைமாடு வளர்ப்புமூலம் மனநோய் குணமடைந்தோரின் மேம்பாடு” குறித்த மூன்று மாத காலச் செயல்திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் துவக்க விழா 28.03.2015அன்று மதுரை, ஆயத்தம்பட்டி கிராமம், எம்.எஸ். செல்லமுத்து தோட்ட வளாகத்தில் நடைபெற்றது. இத்திட்டத்திற்குச் சென்னை மஹிந்த்ரா கன்சல்டிங் இன்ஜினியர்ஸ் லிமிடெட் நிதியுதவி செய்கிறது. மனநோய் குணமடைந்தோரின் மறுவாழ்வு மற்றும் வாழ்வாதாரத்திற்கான இத்திட்டம் ஒரு புதிய முயற்சியாகும்.

பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் திட்டத்தைத் துவக்கிவைத்துச் சிறப்புரை ஆற்றினார். அவர் தமது உரையில் மனிதனின் வேதனை அல்லது துயரத்தைப் போக்குவதில் விலங்குகள் மிகுந்த பங்கு வகிக்கின்றன என்று குறிப்பிட்டார். மேலும், மனநலம் பாதிக்கப்பட்டோரின் வாழ்வியல் மேம்பாட்டிற்கான அனைத்துத் தொழில்நுட்ப உதவிகளையும் பல்வேறு பயிற்சிகள்மூலம் பல்கலைக்கழகம் வழங்கும் என்றார். மதுரை மாவட்ட ஆட்சியர் முனைவர் எல். சுப்பிரமணியன் அவர்கள் கறவைமாடு வளர்ப்பு – சிறப்புச் செயல்திறன் பாட விளக்கம் என்ற புத்தகத்தை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றினார். மனநோய் குணமடைந்தோரின் மறுவாழ்விற்கு அனைத்து விதமான நிதியுதவியை வழங்கும்படி வங்கி அதிகாரிகள் மற்றும் கால்நடைப் பராமரிப்புத் துறை அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார். தொலைநிலைக் கல்வி இயக்குநர் முனைவர் தே. தியாகராஜன் அவர்கள் மதுரையில் செயல்படுத்தப்பட உள்ள செயல்திறன் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் செயலாக்கம் குறித்து விளக்கினார். மதுரை, கால்நடைப் பராமரிப்புத் துறையின் மண்டல இணை இயக்குநர் டாக்டர் ஆர். கோபிநாத், மதுரை ஆவின் பொது மேலாளர் திரு. கிறிஸ்டி, மதுரை மாவட்ட இந்தியன் வங்கி மேலாளர் திரு. ஆர். முருகபிரபு, சென்னை மஹிந்த்ரா கன்சல்டிங் இன்ஜினியர்ஸ் லிமிடெட்டின் முதன்மைச் செயல் அலுவலர் திரு.



சி.எஸ். நாராயணன், பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் சி. சந்திரகாசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். முன்னதாக, தமிழ்நாடு, மாவட்ட மன நலத் திட்டம், மாநில இணைப்பு அலுவலர் டாக்டர் சி. ராமசுப்ரமணியன் அவர்கள் வரவேற்புரை ஆற்றி, எம்.எஸ். செல்லமுத்து அறக்கட்டளை மற்றும் ஆராய்ச்சி பவுண்டேஷனின் குறிக்கோளை விளக்கியுரைத்தார். நிகழ்ச்சி முடிவில், மதுரை கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் பி. முருகானந்தன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

## தேர்வுக் கூடம் – திறப்பு விழா




இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் மேம்பாட்டு நிதியில் கல்லூரியின் காமராஜர் கட்டடத்தின் மூன்றாவது தளத்தில் கட்டப்பட்ட தேர்வுக் கூடத்தைப் புதுதில்லி, வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்வித் துறைச் செயலர் மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் தலைமை இயக்குநர் முனைவர் எஸ். ஐயப்பன் அவர்கள் 20.03.2015அன்று திறந்துவைத்தார். இந்நிகழ்ச்சியில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர், பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன், கல்லூரி முதல்வர் (பொ.) முனைவர் சி. பாலச்சந்திரன், சிகிச்சையியல் இயக்குநர்(பொ.) முனைவர் டி.என். கணேஷ், ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் கா. குமணன் மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்றனர்.

## 24ஆவது ஆராய்ச்சிக் குழுக் கூட்டம்

பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குநரகம், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 05.03.2015 அன்று நடத்திய 24ஆவது ஆராய்ச்சிக் குழுக் கூட்டத்தினைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் தலைமையேற்றுத் துவக்கி வைத்தார். மேலும், பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குநரகம் உருவாக்கிய "தானுவாஸ் ஆராய்ச்சித் திட்ட மேலாண்மை முறை", சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் நூலக அறிவியல் துறையினர் உருவாக்கிய "இந்தியக் கால்நடை மருத்துவ அறிவியல் ஆராய்ச்சிச் சஞ்சிகையின் முந்தைய பிரதிகளின் தொகுப்பு அடங்கிய குறுந்தகடு" ஆகியவற்றை வெளியிட்டார். மேலும், ஆராய்ச்சி இயக்குநரகத்தின் செயலாக்க நடைமுறைகள் அடங்கிய கையேட்டினையும் வெளியிட்டார். பல்கலைக்கழகத்தின் முன்னாள் ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் கே.எஸ். பழனிசுவாமி மற்றும் தமிழக அரசின் கால்நடைப் பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் துறைக் கூடுதல் இயக்குநர் டாக்டர் பி.மகேந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் கா. குமணன் அவர்கள் முந்தைய ஆராய்ச்சிக் குழுக் கூட்டப் பரிந்துரைகளின் மீது எடுக்கப்பட்ட மேல்நடவடிக்கைகள் குறித்த விவரம், 2014ஆம் ஆண்டில் பல்கலைக்கழகம் பெற்ற புரவலர் ஆராய்ச்சித் திட்டங்கள், நடப்பிலுள்ள 72 அரசுத் திட்டங்கள் 2015–16ஆம் ஆண்டும் தொடர்வதற்கான பரிந்துரை குறித்து விரிவாக எடுத்துரைத்தார். 2014ஆம் ஆண்டு முடிவுற்ற 15 திட்டங்களின் முதன்மை ஆராய்ச்சியாளர்கள் அவர்களது ஆராய்ச்சி முடிவுகளை விளக்கினர். ஆராய்ச்சிக் குழுக் கூட்ட




உறுப்பினர்கள், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள்/வேளாண் அறிவியல் மையங்கள்/உழவர் பயிற்சி மையங்கள்/ பண்ணைகள் ஆகியவற்றின் தலைவர்கள் மற்றும் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் துறைத் தலைவர்கள் ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்றனர். பல்கலைக்கழகத்தின் எதிர்கால ஆராய்ச்சித் திட்டங்களைச் செம்மைப்படுத்த ஆராய்ச்சிக் குழு உறுப்பினர்கள், நிபுணர்கள் மற்றும் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ஆகியோர் வழங்கிய ஆலோசனைகளுடன் ஆராய்ச்சிக் குழுக் கூட்டம் முடிவுற்றது.

## விரிவாக்கக் கல்விக் குழுக் கூட்டம்



பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் தலைமையில் பல்கலைக்கழகத்தின் இருபத்து ஆறாவது விரிவாக்கக் கல்விக் குழுக் கூட்டம் 06.03.2015அன்று சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்றது. துணைவேந்தர் அவர்கள் "இலாபகரமான ஆடு வளர்ப்பிற்கு அறிவியல் முறையிலான தொழில்நுட்பங்கள்" என்ற பண்ணை வானொலி வேளாண் பள்ளிப் புத்தகத்தை வெளியிட்டுக் கருத்துரை வழங்கினார். விரிவாக்கக் கல்வி இயக்குநர் மற்றும் விரிவாக்கக் கல்விக் குழுவின் உறுப்பினர் செயலர் முனைவர் சி. சந்திரகாசன் அவர்கள் 26ஆவது விரிவாக்கக் கல்விக் குழுக் கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்புகள் மற்றும் 2014ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட விரிவாக்கப் பணிகள் குறித்து அறிக்கை அளித்தார். பல்கலைக்கழகத்தின் முன்னாள் விரிவாக்கக் கல்வி இயக்குநர்கள் முனைவர் எப்.ஆர். ஷெரிப் மற்றும் முனைவர் கோ. துளசி , நியமனம் செய்யப்பட்ட புறநிலை விரிவாக்க வல்லுநர்கள் மற்றும் விரிவாக்கக் கல்விக் குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் பங்கேற்றுக் கருத்துத் தெரிவித்தனர். பல்கலைக்கழக

Posted on 23.04.2015 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 21.04.2015

Licensed to post without prepayment No.TN/PMG/(CCR)/WPP-708/15-17
Registration No.TN/TBM/32/2015-17

Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254
Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.
Printed and Published by
Dr. S.A. Asokan, Ph.D., Director of Distance Education
on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University
and Printed at University Publication Division, Madhavaram Milk Colony,
Mathur Road, Ambathur Taluk, Tiruvallur District, Chennai - 600 051
**Editor : Dr. S.A. Asokan, M.V.Sc., Ph.D., Phone : 044-2555 4411**
**E-mail : dde@tanuvas.org.in**

அதிகாரிகள், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள், வேளாண் அறிவியல் நிலையங்கள், உழவர் பயிற்சி மையங்கள், ஆராய்ச்சி நிலையங்களின் தலைவர்கள் மற்றும் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் துறைத் தலைவர்கள் கூட்டத்தில் பங்கேற்றனர்.

### அறிவியல் ஆலோசனைக் குழுக் கூட்டம்

காட்டுப்பாக்கம், வேளாண் அறிவியல் நிலையத்தின் 18ஆவது அறிவியல் ஆலோசனைக் குழுக் கூட்டம் 07.03.2015அன்று நிலைய வளாகத்தில் நடைபெற்றது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்துச் செயல் திட்டம் குறித்துக் கருத்துரை வழங்கினார். விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் சி. சந்திரகாசன், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் கே. பொன்னுசாமி, பெங்களூரு இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் எட்டாவது மண்டலத்தின் திட்ட இயக்குநரகத்தின் முதன்மை அறிவியலாளர் டாக்டர் டி. சீனிவாச ரெட்டி, அறிவியல் ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்றுக் கருத்துரை வழங்கினர். காட்டுப்பாக்கம், வேளாண் ஆராய்ச்சி நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் பா. குமாரவேல் அவர்கள் 17ஆவது அறிவியல் ஆலோசனைக் குழுக் கூட்ட நடவடிக்கைக் குறிப்புகளின் செயல்பாடுகள் குறித்து அறிக்கை அளித்தார்.

## நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்

### செல்லப் பிராணிகள் உணவு தயாரிப்பு மையக் கட்டடம் – திறப்பு விழா

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகச் செயலாக்கக் கல்வித் திட்டத்தின்கீழ் கல்லூரியின் கால்நடை உற்பத்திப் பொருட்கள் தொழில்நுட்பத் துறையில் ரூபாய் 60.25 இலட்சம் நிதியில் உருவாக்கப்பட்ட “செல்லப் பிராணிகள் உணவு தயாரிப்பு மையம்” 02.03.2015அன்று பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் முனைவர் கொ.ஆ. துரைசாமி மற்றும் பேராசிரியர்கள் பங்கேற்றனர். இம் மையமானது முட்டையிட்டுக் கழித்த கோழிகள் மற்றும் இறைச்சி எலும்புத் தூளை உபயோகித்துத் தரமான ஊட்டச்சத்து கொண்ட வெவ்வேறு வகையான செல்லப் பிராணிகள் உணவு தயாரிப்பினை இலக்காகக் கொண்டு செயல்படும்.

## திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்

### பயிற்சி

திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும் புதுவாழ்வுத் திட்டமும் இணைந்து “ஆடு வளர்ப்பு” குறித்த மூன்று நாள் பயிற்சியை மூன்று தொகுதியாகவும், “கோழிக் குஞ்சு வளர்ப்போர் பயிற்சியை” இரு தொகுதியாகவும் நடத்தின. மேலும், தமிழ்நாடு மாநில அறிவியல் தொழில்நுட்பக் கழகத்தின் புதிய தொழில்நுட்பத்தைப் பரவலாக்குதல் திட்டத்தின்கீழ் “நிலையான உற்பத்திக்குக் கறவைமாடுகளில் வெப்ப அயர்ச்சியைப் போக்குவதற்கான பராமரிப்பு முறைகள்” குறித்த இரு நாள் பயிற்சியும் நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் சே. பிரதாபன் அவர்கள் பயிற்சியின் நிறைவு விழாவில் பங்கேற்று, பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். மொத்தம் 183 பண்ணையாளர்கள் பயிற்சியில் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

## ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்

### கோமாரி நோய்த் தடுப்பூசி முகாம்

ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும், கால்நடைப் பராமரிப்புத் துறையும் இணைந்து 05.03.2015 முதல் 21.03.2015வரை சிறப்பு கோமாரி நோய்த் தடுப்பூசி முகாமை நடத்தின. ஒரத்தநாட்டைச் சுற்றியுள்ள தென்னமநாடு, புலவன்காடு, தெலுங்கன்குடிகாடு, உறந்தராயன்குடிகாடு, கண்ணந்தங்குடி மேலையூர், கண்ணந்தங்குடி கீழையூர், கக்கரை, புதூர் மற்றும் பாளம்புத்தூரில் 2238 மாடுகளுக்குக் கோமாரி நோய்த் தடுப்பூசி போடப்பட்டது.

### பணி ஓய்வு



கோயம்புத்தூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஆர். பாலகோபால் அவர்கள் 31.03.2015அன்று பணி ஓய்வு பெற்றார். 21.03.1955இல் பிறந்த இவர் 34 ஆண்டும் 03 மாதமும் பணியாற்றியுள்ளார்.



பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பண்ணையின் இணைப் பேராசிரியர் முனைவர் எஸ். குமரன் அவர்கள் 31.03.2015அன்று பணி ஓய்வு பெற்றார். 28.03.1955இல் பிறந்த இவர் 31 ஆண்டும் 07 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் பால்வள அறிவியல் துறையின் கொள்கலன் இயக்கப் பணியாளர்(சிறப்பு நிலை) திரு. எஸ். ஞானம் அவர்கள் 31.03.2015அன்று பணி ஓய்வு பெற்றார். 14.03.1957இல் பிறந்த இவர் 30 ஆண்டும் 11 மாதமும் பணியாற்றியுள்ளார்.



பல்கலைக்கழக நிதி அலுவலகத்தின் உடனாள்(சிறப்பு நிலை) திரு. பி.வி. ரவிகுமார் அவர்கள் 31.03.2015அன்று பணி ஓய்வு பெற்றார். 12.03.1957இல் பிறந்த இவர் 32 ஆண்டும் 11 மாதமும் பணியாற்றியுள்ளார்.



காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுநிலைப் பட்ட ஆராய்ச்சி நிலையத்தின் திறனறி பணியாளர்(தேர்வு நிலை) திரு. வி. மாரிமுத்து அவர்கள் 31.03.2015அன்று பணி ஓய்வு பெற்றார். 10.03.1955இல் பிறந்த இவர் 18 ஆண்டு பணியாற்றியுள்ளார்.